பூட்டுதான் வீட்டுக்குப் பாதுகாப்பு, 'திராவிட மாடல்' அரசுதான் நாட்டுக்குப் பாதுகாப்பு; தமிழ்நாட்டில் மகளிர் மேம்பாட்டுக்காக

# சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய் அளவில் வங்கிக்கடன் இணைப்பு!

## வேடசந்தூரில் நடைபெற்ற அரசு விழாவில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**வேடசந்தூர், அக்.11-**

**திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.49.59 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், மருத்துவமனை, பேருந்து நிலையம், பள்ளி உள்ளிட்டவற்றுக்காக ரூ.28.14 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பல்வேறு கட்டடங்களையும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.**

அப்போது, அவர் "ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான அளவில் வங்கிக் கடன் இணைப்புகளை நாம் கொடுத்திருக்கிறோம். உங்களுக்குப் பயன்பெறும் வகையில், இந்தியாவிலேயே முதன் முறையாக, உங்களின் கோரிக்கையை ஏற்று குழுக்களின் சகோதரிகளுக்கு அடையாள அட்டையை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். அந்தப் பணிகளையும் ஆரம்பித்துவிட்டோம். அந்த அடையாள அட்டைகள் படிப்படியாக உங்களை வந்துசேரும்" என்று கூறினார்.

இவ்விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறுகிற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் நான் கலந்துகொண்டு, 6 ஆயிரம் பயனாளிகளுக்கு, 62 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுக்கு, எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பாராட்டுகள் - வாழ்த்துகள்

இன்றைக்கு மட்டும் வேடசந்தூர், குஜிலியம்பாறை ஒன்றியங்களில் சாலைகள், பள்ளிக் கட்டடங்கள், பாலங்கள் என 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்துள்ளோம். உங்கள் மாவட்ட அமைச்சர்கள் அண்ணன் ஐ.பெரியசாமி அவர்களுக்கும் அண்ணன் அர.சக்கரபாணி அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களின் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் காந்திராஜன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரை பல்வேறு நலத்திட்டப் பணிகளை நடத்தி முடித்துள்ளார். அவர், எப்போது எங்களை சந்தித்தாலும் எங்கள் வேடசந்தூர் தொகுதிக்கு இந்தப் பணிகளைச் செய்து தர வேண்டும் என்று உரிமையோடு மக்கள் பணியில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பார்.

இன்றைக்கு 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வேடசந்தூர் அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவில் புதிய கட்டடங்கள், காமராஜர் பேருந்து நிலையக் கட்டடம், புதிய வகுப்பறைக் கட்டடம் போன்ற பல்வேறு நலத்திட்டப் பணிகளை, நாங்கள் தொடங்கி வைத்துள்ளோம். இந்த திண்டுக்கல் மாவட்டத்தில், இரண்டு அமைச்சர்கள் இருப்பது கூடுதல் சிறப்பு. அண்ணன் ஐ.பெரியசாமி அவர்களும் அண்ணன் சக்கரபாணி அவர்களும் அமைச்சர்களாக இருக்கிறார்கள்.

### கிராமங்கள் எல்லாம் நகரங்கள்

அண்ணன் ஐ.பெரியசாமி அவர்களின் துறை, நம் நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லப்படுகிற கிராமங்களின் வளர்ச்சிக்காக, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக ஏகப்பட்ட திட்டங்களை அவர் செயல்படுத்தி வருகிறார். அதனால்தான் இன்றைக்கு, தமிழ்நாட்டில் உள்ள கிராமங்கள் எல்லாம் நகரங்கள் போல் முன்னேறி வருகின்றன.

இன்றைக்கு, தமிழ்நாட்டுக்கே உணவளிக்கின்ற அமைச்சர்தான் உங்களின் உணவுத்துறை அமைச்சர் அண்ணன் சக்கரபாணி அவர்கள். அவரின் துறையும் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. இந்த இரண்டு அமைச்சர்களும் முதலமைச்சரின் வழிகாட்டுதல்களின்படி, திண்டுக்கல் மாவட்டத்தின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, ஒட்டு மொத்த தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் தங்களை அர்ப்பணித்து, செயலாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

நம் முதலமைச்சர் அவர்கள், அனைத்து மக்களுக்கும் பயன்பெறுகிற வகையில், ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்து செயல்படுத்தி வருகிறார். ஆட்சிக்கு வந்தவுடன் அவர் போட்ட முதல் கையெழுத்தே, மகளிருக்கான விடியல் பயணம் திட்டத்தில் தான். அந்தத் திட்டத்தில் இந்த நான்கரை வருடங்களில் 800 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை இந்தத் திட்டத்தால் மட்டும் சேமிக்கிறார்கள்.

### காலை உணவுத் திட்டம்

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வந்தால், முதலில் தரமான காலை உணவு, அதன்பிறகு தரமான கல்வி கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். சென்ற மாதம், பஞ்சாப் முதலமைச்சர் பகவான் சிங் அவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து, நம் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தைப் பார்த்துப் பாராட்டினார்கள். "அடுத்த ஆண்டிலிருந்து எங்கள் மாநிலத்திலும் செயல்படுத்தப்போகிறேன்" என்று நம் மாநிலத்தைப் பார்த்து சொல்லிவிட்டுச் சென்றார்.

அரசுப் பள்ளியில் படித்த மாணவ, மாணவி கள் உயர்கல்வி படிக்கவைக்க வேண்டும் என்று நம் தலைவர் அவர்கள் கொண்டுவந்த திட்டங்கள்தான் "புதுமைப் பெண் திட்டம்", "தமிழ்ப்புதல்வன் திட்டம்". இந்தத் திட்டங்களின்மூலம் 8 லட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளார்கள். இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளார் முதலமைச்சர் அவர்கள்.



15 நாட்களுக்கு முன்பு, தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள் அந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக தமிழ்நாட்டுக்கு வந்திருந்தபோது, தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டத்தைப் பார்த்துவிட்டு, இவை மிகச்சிறந்த திட்டம் என்று பாராட்டிப் பேசினார்கள். அடுத்த நிதியாண்டில் இருந்து தெலங்கானா மாநிலத்திலும் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தப் போகிறேன் என்று பாராட்டிவிட்டுச் சென்றார்.

### மகளிர் உரிமைத்தொகை

இப்படி, மற்ற மாநில முதலமைச்சர்களும் பாராட்டுகிற அரசாக நம் திராவிட மாடல் அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம், தேர்தல் வாக்குறுதியில் தலைவர் அவர்கள் சொன்ன திட்டம். இந்த மாதத்துடன் சேர்த்து 25 மாதங்களாக ஒரு கோடியே 20 லட்சம் மகளிருக்கு, மாதம் 1000 ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கொடுக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் இந்த கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வரவில்லை என்று கோரிக்கைகள் வைத்துள்ளார்கள். அதைச் சரிசெய்ய நம் தலைவர் அவர்கள், விதிமுறைகளில் சில தளர்வுகளைச் செய்துள்ளார். `உங்களுடன் ஸ்டாலின்' கோரிக்கை முகாம்கள் 10,000 என்ற அளவில் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றில், 8,000 முகாம்கள் முடிவடைந்துள்ளன. அதில், 60 சதவிகித மனுக்கள் மகளிர் உரிமைத்தொகை திட்டத்திற்காகத்தான் விண்ணப்பித்துள்ளார்கள். இன்னும் இரண்டு மாதங்களில் இன்னும் கூடுதலான மகளிருக்கு 'கலைஞர் மகளிர் உரிமைத்தொகை' நிச்சயமாக வந்தடையும்.

இப்படிப் பல்வேறு முற்போக்குத் திட்டங்களின் காரணமாகத்தான் பொருளாதார வளர்ச்சியில் 11.19 சதவிகித வளர்ச்சியடைந்து இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக நம் தமிழ்நாடு திகழ்ந்து கொண்டு இருக்கிறது.

மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மீது நம் முதலமைச்சர் அவர்களுக்குத் தனி அக்கறையும் பாசமும் உண்டு. அதனால்தான், அந்தப் பொறுப்பை எனது துறையின் கீழ் கொடுத்து, "நீ இதைப் பார்த்துக்கொள், தனிக் கவனம் செலுத்து" என்று அறிவுறுத்தினார். இந்த நான்கு வருடங்களில் மட்டும் ஒரு லட்சம் கோடிக்கும் அதிகமான அளவில் வங்கிக் கடன் இணைப்புகளை நாம் கொடுத்திருக்கிறோம். அந்த வகையில், இன்றைக்கு இந்த மேடையில் 5 ஆயிரம் குழுச் சகோதரிகளுக்கு 34 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் இணைப்புகளை வழங்க இருக்கிறோம். உங்களுக்குப் பயன்பெறும் வகையில், இந்தியாவிலேயே முதன் முறையாக, உங்களின் கோரிக்கையை ஏற்று குழுக்களின் சகோதரிகளுக்கு அடையாள அட்டையை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். அந்தப் பணிகளையும் ஆரம்பித்துவிட்டோம். அந்த அடையாள அட்டைகள் படிப்படியாக உங்களை வந்துசேரும்.

குழுக்களின் மூலமாக, தமிழ்நாடு முழுவதும் ஏராளமான பெண்கள் தொழில் முனைவோர்களாக வளர்ந்து வருகிறார்கள். நீங்கள் இன்னும் பல உயரங்களைத் தொட நம் அரசும், முதலமைச்சரும், நம் துறையும் உங்களுக்கு என்றைக்கும் உறுதுணையாக இருக்கும்.

இங்கு, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இருக்கிறோம். உங்கள் இடத்திற்கு பட்டா வேண்டும் என்பது உங்களின் பல வருட கோரிக்கை. பல தலைமுறை கோரிக்கை என்று கூட சொல்லலாம். அது உங்களின் உரிமை, கனவு. உங்களின் உரிமையை, கனவை இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் உண்மையாக்கிக் காட்டி இருக்கிறார்.

பொதுவாக, பட்டாவைத் தேடி அரசு அலுவலகங்களுக்கு நீங்கள் அலைந்த காலம் போய், அரசு அதிகாரிகள், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் நேரில் வந்து, உங்களின் பட்டாக்களை உங்களிடம் கொடுக்கிறோம். மாணவர்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநர்கள், விளையாட்டு வீரர்கள் என சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களின் முன்னேற்றத்துக்கும் ஒன்று சேர்த்து உழைக்கிறது, நம் அரசு. மாநில உரிமைகள், சமூக நீதியைக் காக்கின்ற அரசாக நம் அரசு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த நேரத்தில் ஒரு விஷயத்தைச் சொல்லி விடைபெற விரும்புகிறேன்.

### வீட்டுக்குப் பாதுகாப்பு பூட்டு

திண்டுக்கல் என்றால் பூட்டுதான் பேமஸ். பூட்டுதான் வீட்டுக்குப் பாதுகாப்பு. பூட்டு எப்படி வீட்டுக்குப் பாதுகாப்போ, அதேபோல் நம் திராவிட மாடல் அரசு, இந்த ஸ்டேட்டுக்கு பாதுகாப்பு என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஸ்டேட்டுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டுக்கே நம் திராவிட மாடல் அரசும், நம் தமிழ்நாட்டு மக்களும்தான் பாதுகாப்பு என்பதை நீங்கள் உணர வேண்டும். உங்களுக்காக உழைக்க நம் முதலமைச்சர் அவர்கள் காத்துக்கொண்டு இருக்கிறார். எனவே, இந்த அரசுக்கு நீங்கள் எப்போதும் போல, வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலிலும் உங்களின் ஆதரவைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நலத்திட்ட உதவிகளைப் பெற்ற அத்தனை பேருக்கும் மீண்டும் எனது அன்பையும் வாழ்த்துகளையும் தெரிவித்து, இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் அமைச்சர் பெருமக்களுக்கும், வந்திருந்த சகோதரிகள் உங்கள் அத்தனை பேருக்கும், மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, அர.சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐ.பி.செந்தில்குமார், காந்திராஜன், மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் ஐ.ஏ.எஸ்., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் ஐ.பி.எஸ்., உதவி ஆட்சியர் மருத்துவர் வினோதினி பார்த்திபன் ஐ.ஏ.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திலகவதி, மாநில ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் சதீஷ்பாபு, மருத்துவ நலப்பணிகள் இணை இயக்குநர் மருத்துவர் உதயகுமார் மற்றும் அரசு அதிகாரிகள், அலுவலர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

---

## கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

# சென்னை மேற்கு மாவட்ட பாக ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் மற்றும் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நியமிக்கப்பட்ட பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Co-ordinators) ஆலோசனைக் கூட்டம் இன்று (11.10.2025 சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில், நுங்கம்பாக்கம், வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஜய்துன் உணவகத்தில் (zaitoon hotel) மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மண்டல தேர்தல் பொறுப்பாளர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Co-ordinators) ஆகியோர் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



மேயர் திருமதி ஆர்.பிரியா, நேற்று (10.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சியின் மூன்று வட்டார அலுவலகங்களிலும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தினை திறந்து வைக்கும் விதமாக, அண்ணாநகர் மண்டலம், செனாய் நகரில் உள்ள மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில் வட்டார ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தினைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், மாமன்ற உறுப்பினர் திருமதி மெட்டில்டா கோவிந்தராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## முரசொலி செல்வம் முதலாம் ஆண்டு நினைவு நாள்!.. முதல் பக்கத் தொடர்ச்சி

பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்த கருத்துரிமைப் போராளி.

கழகத்தின் போர்வாளான 'முரசொலி' நாளேட்டில் 35 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியராகப் பொறுப்பேற்று தன் எழுத்துகளால் ஜனநாயகக் குரலாக ஒலித்தவர்.

அடக்குமுறைக்கு அஞ்சாமல் சட்டமன்றத்தில் கூண்டிலேறிக் கருத்துரைத்தவர். தேர்தல் களம் முதல் திரைப்படப் பணிகள் வரை அனைத்துத் துறைகளிலும் முத்திரையைப் பதித்தவர். எந்த நிலையிலும் கழகமே மூச்சு என வாழ்ந்த ஆழமான கொள்கைவாதி.

'சிலந்தி' என்ற பெயரில் முரசொலியில் அவர் எழுதிய நையாண்டியும் நகைச்சுவையும் ததும்பும் கட்டுரைகள் கழகத்தின் இளைய தலைமுறையினருக்குக் கொள்கை இரத்தம் பாய்ச்சும் வலிமை கொண்டவை. தன் இறுதிமூச்சு நிற்கும் வரை முரசொலியில் கட்டுரை எழுதியவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் மடியில் வளர்ந்த பிள்ளையான முரசொலி செல்வம் அவர்கள், கடந்த ஆண்டு (2024) அக்டோபர் திங்கள் 10ஆம் நாள், நாமெல்லாம் சிறிதும் எதிர்பார்த்திராத வகையில் அனைவரையும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கி திடீரென மறைவெய்தினார்கள்.

முரசொலி செல்வம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் நேற்று!

### பெங்களூரு இல்லம்!

இந்நாளில், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பெங்களூருவில் உள்ள முரசொலி செல்வம் அவர்களின் இல்லம் சென்றார்.

அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி வணங்கினார்.

### 'முரசொலி' அலுவலகம்!

சென்னையில் - 'முரசொலி' வளாகத்தில் அமைந்துள்ள முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு முன்னதாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் மலர் தூவி வணங்கினார்கள்.

மேலும் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., அமைச்சர் மா.சுப்பிரமணியன், தயாநிதி மாறன் எம்.பி., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ., கழக செய்தித் தொடர்புச் செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், ஆயிரம் விளக்கு பகுதிச் செயலாளர்கள் மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், முன்னாள் பகுதிச் செயலாளர் ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, வி.எஸ். ராஜ் உள்பட ஆயிரத்துக்கும் மேற்பட்ட கழக முன்னணியினர் - தோழர்கள் கலந்துகொண்டார்கள்.